மாதர்
சாசனத்தின் கீழ்
வரும்

# சுய பாதுகாப்பு ஆணை

முக்கிய தகவல்கள்



# பொருளடக்கம்


**01** முன்னுரை

**02** குடும்ப வன்முறை மற்றும் நீங்கள் விண்ணப்பிக்கக் கூடிய ஆணைகள்

**04** நீதிமன்ற நடைமுறையின் மேலோட்டம்

**06** விண்ணப்பதாரருக்கு: சுய பாதுகாப்பு ஆணைக்கு நீங்கள் விண்ணப்பம் செய்வதாய் இருந்தால்

**11** புகாருக்கு பதிலளிப்பவருக்கு (எதிராளி) : சுய பாதுகாப்புக்கான ஆணையின் அழைப்பாணையைப் பெறும்போது

**15** கட்டாய ஆலோசைன

**16** பயனுள்ள தகவல்



பொறுப்புத் துறப்பு

- இந்த கையேட்டில் உள்ள விளக்கப்படங்கள் வழக்கமான செயல்முறைகளை மட்டுமே குறிக்கின்றன . ஒவ்வொ ரு வழக்கிற்கும், நிகழ்மை மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து, மிகவும் பொருத்தமான நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கு நீதிபதிக்கு முழு உரிமை உள்ளது.
- இந்த வெளியீடு பொதுவான தகவல்களுக்கு மட்டுமே தயாரிக்கப்பட்டது.
  இது மாதர் சாசனத்தின் கீழ் வரும் தனிநபர் பாதுகாப்பு ஆணைகளை உள்ளடக்கியது மட்டுமே தவிர பாதிக்கப்படக்கூடிய பெரியவர்கள் சட்டம் அல்லது துன்புறுத்தல் சட்டத்தின் கீழ் வரும் உத்தரவு அல்ல.
- சந்தேகம் இருக்கும்போது தயவுசெய்து பிறர்சார்பற்ற சட்ட ஆலோசைனயைப் பெறவும்.



# முன்னுரை

மாதர் சாசனத்தின் கீழ் ஒரு பாதுகாப்பு ஆணைக்கு விண்ணப்பிக்க நீங்கள் கருதுகிறீர்கள் என்றால், உங்களுக்காகவும் மற்றும்/அல்லது 21 வயதிற்குட்பட்ட (வயது குறைந்த உறுப்பினர்) ஒரு குடும்ப உறுப்பினருக்காகவும் விண்ணப்பதாரராகிய நீங்கள் எவ்வாறு விண்ணப்பிக்கலாம் என்பது குறித்து இந்த கையேடு உங்களுக்கு வழிகாட்டும்.

பாதுகாப்பு ஆணைக்கான அழைப்பாணை உங்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், அழைப்பாணைகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்து எதிராளிக்கு இந்த கையேடு உதவும்.

குடும்ப நீதி நீதிமன்றங்களும் (எஃப்.ஜே.சி) மற்றும் பொருத்தமான கூட்டு முகவாண்மை யகங்களும் குடும்ப வன்முறையைக் கையாளுவதில் உதவிகளையும் ஆதரவையும் வழங்குகின்றன.

# குடும்ப வன்முறை மற்றும் நீங் கள் விண்ண ப்பிக்கக் கூடிய ஆணைகள்

## “குடும்ப வன்முறை” என்றால் என்ன?

பின்வரும் எந்த ஒரு செயலும் குடும்ப உறுப்பினர் எதிராகப் புரியும் “குடும்ப வன்முறையாக” இருக்கலாம்:



காயம் விளைவிக்கப்படும் என்று ஒருவரை பயத்தில் ஆழ்த்துவது அல்லது ஆழ்த்த முயற்சிப்பது;



காயம் விளைவிப்பது;



ஒருவரின் விருப்பத்திற்கு எதிராக அவரைத் தவறான முறையில் அடைத்து வைப்பது அல்லது தடுத்து வைப்பது; அல்லது



மனவேதனை உண்டா க்கும் நோக்கில் இடைவிடாமல் தொந்தரவு கொடுப்பது;

### “குடும்ப உறுப்பினர்” எனத் தகுதி பெறுபவர்கள் யார்?

- கணவன், மனைவி அல்லது முன்னா ள் கணவன், மனைவி
- பிள்ளை, தத்தெடுக்கப்பட்ட பிள்ளை அல்லது மாற்றான் பிள்ளை உட்பட
- பெற்றோர்கள்
- மாமனார்-மாமியார்
- சேகாதரர்கள் அல்லது சேகாதரிகள்; அல்லது
- வேறெந்த உறவினர் அல்லது நீதிமன்ற த்தால் குடும்ப உறுப்பினராகக் கருதப்படக்கூடிய மன அல்லது உடற்குறைபாடு உள்ள வேறு எந்த நபரும்



# ஆணை வகைகள்

| | |
|---|---|
| **சுய பாதுகாப்பு ஆணை (பிபிஓ)** | • எதிராளி விண்ணப்பதாரர் அல்லது சம்மந்தப்பட்ட குடும்ப உறுப்பினர் மீது குடும்ப வன்முறை பயன்படுத்த கூடாது என உத்தரவிடுவது<br>• எதிராளி குடும்ப வன்முறை புரிந்துள்ளார் அல்லது புரியக்கூடும் மற்றும் குடும்ப உறுப்பினரின் பாதுகாப்பிற்கு பிபிஓ அவசியம் என்பதில் நீதிமன்ற ம் திருப்தி அடைந்தால் இது வழங்கப்படும் |
| **துரித ஆணை (ஈஓ)** | • நீதிமன்ற விசாரணையின் தேதி வரை விண்ணப்பதாரரை பாதுகாக்கும் ஒரு தற்காலிக பிபிஓ<br>• குடும்ப வன்முறை நிகழும் சாத்தியம் அதிகம் உண்டு என நீதிபதி கருதும்போது எதிராளி இல்லாத நிலையில் இது வழங்கப்படுகிறது |
| **மனையிட/ வீட்டு வளாக விலக்கல் ஆணை (டிஇஓ)** | • எதிராளியை விண்ணப்பதாரரின் அல்லது பாதுகாக்கப்பட்ட குடும்ப உறுப்பினரின் வீட்டினுள் அல்லது வீட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு வருவதை தடை செய்கிறது அல்லது கட்டுப்படுத்துகிறது. |
| **ஆலோசனை ஆணை (சிஜிஓ)** | • இந்த ஆணைக்காக (சிஜிஓ) விண்ணப்பம் செய்ய தேவையில்லை ஏனெனில் நீதிமன்ற ம் அதன் விருப்புரிமைப்படி இதை ஆணையிடும். இந்த ஆணையை நீதிமன்ற ம் விண்ணப்பதாரருக்காகவும் அல்லது பாதுகாக்கப்பட வேண்டிய குடும்ப உறுப்பினருக்காகவும் அல்லது அனைவருக்காகவும் ஆலோசைசன அல்லது பொருத்தமான கூட்டு முகவாண்மை யகங்கள் நிர்வகிக்கும் வேறு எந்த திட்டங்களில் கலந்து கொள்ள ஆணையிடும்.<br>• உத்தரவிடப்பட்டால், இரு தரப்பினரும் ஆலோசைனயின் முன்னேற்ற த்தை மறு ஆய்வு செய்ய நீதிமன்ற ம் வரவேண்டும். |

## உத்தரவை மீறுதல்

உத்தரவை மீறுவது ஒரு குற்ற செயலாகும், அதாவது எதிராளி மீது அதன் காரணமாக அபராதம் மற்றும் / அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

எதிராளி வழங்கப்பட்ட உத்தரவை மீறினால்:

- விண்ணப்பதாரர் மீறுதல் குறித்து புகாரளிக்க காவல் துறையை தொடர்பு கொள்ளலாம்.
- எதிராளியின் மீது குற்றம் சாட்ட வேண்டுமா என காவல்துறை விசாரித்து முடிவு செய்யும்.

## கவனிக்க:

- பாதுகாக்கப்பட்ட நபருக்கு எதிராக குடும்ப வன்முறையைச் செய்ய எதிராளி வேறு எந்த நபரையும் தூண்டவோ உதவவோ கூடாது என்ற விதிமுறையையும் ஒரு பிபிஓ உள்ளடக்கியிருக்கலாம்.
- பிபிஓ-விற்கு விண்ணப்பிக்கும்போது ஈஓ மற்றும் / அல்லது டிஇஓ-விற்கான விண்ணப்பத்தையும் செய்யலாம்.
- பிபிஓ, ஈஓ மற்றும் டிஇஓ-வை மீறுவது ஒரு குற்றமாகும்.
- ஒரு சி.ஜி.ஓ-வின் மீறல் நீதிமன்ற அவமதிப்புக்கு ஒப்பாகும்.

# நீதிமன்ற செயல்முறை பற்றிய கணோ ட்டம்

## நீதிமன்ற வருகையின் முக்கியத்துவம்

- விண்ணப்பதாரர் உத்தரவிட்டபடி நீதிமன்ற அமர்வுகளில் ஆஜராகவில்லை என்றா ல், அவரது வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம்.
- நீதிமன்ற அமர்வுகளில் எதிராளி ஆஜராகவில்லை என்றா ல், நீதிபதி அவருக்கு எதிராக கைது உத்தரவு பிறப்பிக்கலாம் அல்லது அவர் இல்லா நிலையிலும் வழக்கைத் தொடரலாம்.

## விண்ண ப்பம்

வி

விண்ணப்பதாரர் பாதுகாப்பு உத்தரவுக்கான விண்ணப்பத்தை Havelock Square-ல் அமைந்திருக்கும் எஃப்.ஜே.சி-யின் குடும்ப பாதுகாப்பு மையத்தில் (எஃப்.பி.சி) அல்லது எந்தவொரு பாதுகாப்பு நிபுணத்துவ நிலையம் (பி.எஸ்.சி) தாக்கல் செய்கிறார்.

தாக்கல் செய்தவுடன், விண்ணப்பதாரர் நீதிபதியை காண்பார். நீதிபதி பிபிஓ அழைப்பாணை ஒன்ற (துரித ஆணையுடன் அல்லது



## அழைப்பாணைகள்

வி எ

மென்சன் ஸ் என அழைக்கப்படும் நீதிமன்ற அமர்வு ஒன்றுக்கு வருவதற்கு விண்ணப்பதாரருக்கும் எதிராளிக்கும் வழக்கு நிச்சயிக்கப்படும்.


எதிராளிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்படும் (துரித ஆணையுடன் அல்லது இல்லாமல்).



வி எ → எதிராளி சம்மதிக்கிறார்

வி எ → எதிராளி சம்மதிக்கவில்லை

## நீதிமன்ற அமர்வு




வி எ

விண்ணப்பதாரருக்கு பிபிஓ வழங்கப்பட்டு நீதிபதி எதிராளியை அல்லது விண்ணப்பதாரரையும் எதிராளியையும் ஆலோசைன அமர்வில் கலந்து கொள்ளுமாறு உத்தரவிடலாம்

இரு தரப்பினரும் 6 மாதங்கள் கழித்து மறுஆய்வுக்காக நீதிமன்றத் திற்கு வர வேண்டியிருக்கலாம்.





வி எ

பிபிஓ வழங்கப்படாது மற்றும் நீதிபதி விண்ணப்பதாரரையும் எதிராளியையும் தேவையான ஆவணங்களைத் தயாரிக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைப்பார்.

ஆவணங்கள் அனைத்தும் தயாராகிவிட்டால் வழக்கு விசாரணைக்குச் செல்ல நாள் குறிக்கப்படும்.



## நீதிமன்ற விசாரணை

வி எ

விண்ணப்பதாரர் மற்றும் எதிராளி இருவரும் தங்கள் வழக்கை முன்வைத் து நீதிபதியிடம் அவர்களது சாட்சியத்தை சமர்ப்பிப்பர். நீதிபதி பிபிஓ வழங்கலாம் அல்லது விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.



வி → விண்ண ப்பதாரருக்கு

எ → எதிராளிக்கு

# நீங்கள் பிபிஓ-விற்கு விண்ணப்பிக்கிறீர்கள் என்றால் (விண்ணப்பதாரருக்கு)

**உங்கள் மீது குடும்ப வன்முறை செயல் இழைக்கப்பட்டு பாதிப்புக்குள்ளாகியிருந்தால் உதவி நாடவும்**

- உங்களுக்கு காயம் ஏற்பட்டிருந்தால் உடனடியாக மருத்துவ உதவி பெறுங்கள்.
- தேவைப்பட்டால், காவல் நிலையத்தில் புகார் செய்யவும்.
- தேவைப்படுமெனின், மேலும் உதவி பெற குடும்பச் சேவை நிலையத்தையோ அல்லது பாதுகாப்பு நிபுணத்துவ நிலையம் தொடர்பு கொள்ளுங்கள்.
- பிபிஓ ஒன்றுக்கு விண்ணப்பம் செய்ய விரும்புகிறீர்களா என முடிவெடுக்கவும்.



## படி 1:

## விண்ணப்பக் கட்டம்



### எங்கு தாக்கல் செய்வது

**இணையத்தளம்**

ஒருங்கிணைந்த குடும்ப விண்ணப்ப நிர்வாக செயல்முறை தளம் (ஐஃபெம்ஸ்) வழியாக (**https://ifams.gov.sg**):

- எஃப்.பி.சி அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பி.எஸ்.சி* மையங்களுக்குச் சென்று விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும்.

**அல்லது நேரில்**

- எஃப்.பி.சி-யில்; அல்லது
- உங்களுக்கு வசதியாக இருக்கும் கீழ்காணும் பி.எஸ்.சி *-களில்:

*பி.எஸ்.சி-களின் ஆக அண்மை பட்டியலை **https://www.msf.gov.sg** -இல் காணலாம்

### எப்படி தாக்கல் செய்வது

- அடையாளத்தை உறுதி செய்ய உங்கள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு உங்களுக்குத் தேவைப்படும்.
- விண்ணப்பப் படிவத்தில் நீங்கள் தெரிவிக்க வேண்டியவை:
  - குடும்ப வன்முறை நிகழ்ந்த சமீபத்திய மற்றும் கடந்த சம்பவம். மேலும் இந்த சம்பவத்தின் தேதி, இடம், சுருக்கமான விவரங்கள், வன்முறை வகை மற்றும் ஏற்பட்ட காயங்களையும் குறிப்பிடவும்.
  - எதிராளியுடனான உங்கள் உறவைக் குறிப்பிடுங்கள்.
  - நீங்கள் விவரிக்கும் சம்பவங்களில் ஈடுபட்ட பிற குடும்ப உறுப்பினர்களை பட்டியலிடுங்கள்.
  - நீதிமன்றத்திடமிருந்து நீங்கள் பெற விரும்புவதை தெரிவிக்கவும் (பிபிஓ மட்டுமா அல்லது , பிபிஓ உடன் டி.இ.ஓ).
  - காவல் நிலையத்தில் செய்யப்பட்ட புகார் அறிக்கை அல்லது மருத்துவ அறிக்கை (ஏதேனும் இருந்தால்) அதனையும் இணைக்கவும்.

### நீதிபதி முன் செல்வது

- உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் எழுதியது உண்மை என்பதை உறுதிப்படுத்த ஒரு நீதிபதியைக் காண்பீர்கள். பி.எஸ்.சி-யிலிருந்து காணொளி மூலம் இது செய்யப்படலாம்.
- நீதிபதி:
  - விண்ணப்பத்தில் உள்ள தகவலை தெளிவுப்படுத்த நீதிபதி உங்களிடம் கேள்விகள் கேட்கலாம்.
  - உங்கள் விண்ணப்பத்தை ஏற்கவும் அல்லது நிராகரிக்கவும் செய்யலாம்**.
  - குடும்ப வன்முறை ஏற்படும் உடனடி ஆபத்து இருப்பதாக நீதிபதி கண்டறிந்தால் ஈஓ ஒன்றை வழங்கலாம்.

** நீங்கள் உங்கள் எண்ணத்தை மாற்றி கொண்டால், அடுத்த நீதிமன்ற தேதியில் உங்கள் விண்ணப்பத்தை நீங்கள் திரும்பப் பெறலாம்.



### கவனத்தில் கொள்க:

- ஈஓ வழங்குவது அல்லது வழங்காமலிருப்பது நீதிபதியின் விருப்புரிமை.
- உங்கள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட பின், அடுத்த வேலை நாளுக்குள், எதிராளிக்கு இது வழங்கப்படுகிறது.
- இது வழங்கப்பட்ட 28 நாட்களுக்குள் காலாவதியாகிறது, ஆனால் நீதிமன்றத்தால் இந்த ஆணையின் காலம் நீட்டிக்கப்படலாம்.



# நீங் கள் பிபிஓ-விற்கு விண்ண ப்பிக்கிறீர்கள் என்றால் (விண்ண ப்பதாரருக்கு) (தொடர்)

### கூடுதல் உதவி

உங்கள் வழக்கு சம்பந்தமாக கூடுதல் உதவி தேவையா என எண்ணிப்பார்க்கவும். இந்த கையேட்டின் 16-ஆம் பக்கத்தில் கூடுதல் தகவல்களைக் காணலாம்.

## படி 2:

## அழைப்பாணை கட்டம்



### அழைப்பாணை விடுத்தல்

உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், நீதிபதி ஈஓ-வுடனோ அல்லது இல்லாமலோ அழைப்பாணையை விடுப்பார்:

- "மென்சன் ஸ்" என்று அழைக்கப்படும் நீதிமன்ற அமர்வில் கலந்து கொள்ள உங்களுக்கு ஒரு தேதியும் நேரமும் வழங்கப்படும். நீங்களும் எதிராளியும் அன்று வர வேண்டும். அந்த நாளில் எதிராளி விண்ணப்பத்திற்கு ஒப்புக் கொள்கிறாரா இல்லையா என தெரிவிப்பார்.
- நீதிமன்ற குடும்ப நிபுணர் ஒருவர் (உதாரணத்திற்கு ஆலோசகர்) தேவைப்பட்டால், உங்களை ஆதரவுச் சேவைகளுடன் இணைப்பார்.

### அழைப்பாணை சார்வு செய்தல்

நீதிமன்றம் எதிராளி மீது அழைப்பாணை ஒன்றை சார்வு செய்யும்:

- அழைப்பாணை என்பது எதிராளியை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடும் ஒரு நீதிமன்ற ஆவணமாகும்.
- இந்த அழைப்பாணை நீங்கள் கொடுத்த முகவரியில் சார்வு செய்யப்படும்.
- ஈஓ கொடுக்கப்பட்டிருந்தால் அது அழைப்பாணையுடன் சார்வு செய்யப்படும்.

## படி 3:

## நீதிமன்ற (மென்சன்ஸ்) அமர்வு கட்டம்



அமர்வு நாளை குறிக்கும் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியன்று குடும்ப நீதிமன்றம் 1-க்கு நேரத்திற்கு வரவும்.

நீங்கள் கலந்து கொள்ள இயலாவிட்டால்:

- அமர்வை வேறொரு தேதிக்கு மாற்றுவதற்கான காரணத்தை ஆதரிக்கும் ஆவணங்களுடன் முறையாக விண்ணப்பம் செய்ய **iFAMS** வலைத்தளத்தை நாடவும். அப்படி உங்கள் காரணத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டால், அமர்வுக்கு நீதிமன்றம் ஒரு புதிய தேதியை குறிக்கும். இல்லையெனில் நீங்கள் அமர்வுக்கு திட்டமிடப்பட்ட தேதியில் கலந்துகொள்ள வேண்டும்.
- இந்த அமர்வில் நீங்கள் கலந்து கொள்ளாவிட்டால், உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம்.
- விண்ணப்பம் தள்ளுபடி செய்த பின்னரும் அதை தொடர நீங்கள் விரும்பினால், விண்ணப்பம் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட நீங்கள் விண்ணப்பம் செய்ய வேண்டும். நீங்கள் வராததற்குச் சரியான காரணங்கள் உள்ளனவா என்று நீதிமன்றம் முடிவு செய்யும்.

அழைப்பாணை வழங்கப்பட்ட பின்னர் எதிராளி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால், அவருக்கு எதிராக நீதிபதி கைது உத்தரவு பிறப்பிக்கலாம் அல்லது எதிராளி இல்லாத நிலையில் வழக்கு தொடரலாம் என்று உத்தரவிடலாம்.

இந்த கட்டத்தில் நீங்கள் இனி வழக்கைத் தொடர விரும்பவில்லை எனில், விண்ணப்பத்தைத் திரும்பப் பெறுவதை நீங்கள் பரிசீலிக்கலாம்.

நீங்கள் மற்றும் எதிராளி இருவரும் ஆஜரானால், உங்கள் இருவரையும் நீதிமன்ற குடும்ப நிபுணரிடம் நீதிமன்றம் அனுப்பலாம்.

### படி 3A: எதிராளி சம்மதிக்கிறார்

நீதிமன்றம் உங்களுக்கு பாதுகாப்பு அவசியம் என திருப்தியடையும் நிலையில் பிபிஓ-வை வழங்கும்.

ஒரு தரப்பினருக்கு அல்லது இரு தரப்பினருக்கும் கட்டாய ஆலோசனைக்கு கூடுதல் உத்தரவும் வழங்கப்படலாம். இந்த கையேட்டின் 15-ஆம் பக்கத்தில் உள்ள "கட்டாய ஆலோசனை"- இன் கீழ் கூடுதல் தகவல்களைக் காணலாம்.

### படி 3B: எதிராளி சம்மதிக்கவில்லை

இந்த வழக்கு விசாரணைக்கு தொடர வேண்டும். ஒரு விசாரணை தேதி வழங்கப்படுவதற்கு முன்னர், முதல் அமர்வின் நாளன்று, நீங்கள் மற்றும் எதிராளி அடுத்த நீதிமன்ற அமர்வு தேதிக்கு தொடர்புடைய ஆவணங்களைத் தயாரிக்குமாறு உத்தரவிடப்படுவீர்கள். இது முதல் அமர்வின் நாளிலிருந்து சுமார் 3 வாரங்களுக்குப் பின்னர்.

நீங்கள் தயாரிக்கும் வழக்கமான ஆவணங்கள், கீழ்கண்டவற்றை கொண்டிருக்க வேண்டும்:

- சம்பவம் குறித்து காவல் துறையிடம் செய்யப்பட்ட புகார், ஏதேனும் இருந்தால்.
- காயங்கள் தொடர்பாக மருத்துவ அறிக்கைகள், ஏதேனும் இருந்தால்.
- பிற சான்றுகள், ஏதேனும் இருந்தால் உதாரணத்திற்கு, உங்களின் புகைப்படங்கள், ஒலிப்பதிவுகள் அல்லது காணொளி பதிவுகள் (ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்) மற்றும் உங்களுக்கும் எதிராளிக்கும் இடையிலான குறுஞ்செய்திகள்.

கீழ்வருவனவற்றை உறுதி செய்க:

- ஒவ்வொரு பக்கத்திலும் பக்க எண்கள் குறிக்கப்பட்டு ஆவணங்கள் சரியான வரிசையில் தொகுக்கப்பட வேண்டும்.
- ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. உங்களிடம் ஆங்கிலம் அல்லாத ஆவணங்கள் இருந்தால், அதிகாரப்பூர்வ மொழிபெயர்ப்பாளர்களிடமிருந்து ஆங்கில மொழிபெயர்ப்புகளை இணைக்கவும்.
- முழுமையான மற்றும் ஒரே மாதிரியான ஆவணங்களின் மூன்று (3) தொகுப்புகள் இவர்களுக்காக தயாரிக்கப்படுகின்றன:

  1) நீதிமன்றத்திற்கு

  2) உங்களுக்கு,

  3) எதிராளிக்கு.



# நீங் கள் பிபிஓ-விற்கு விண்ண ப்பிக்கிறீர்கள் என்றால் (விண்ண ப்பதாரருக்கு) (தொடர்)

## படி 4:

## நீதிமன்ற விசாரணைக் கட்டம்



நீதிமன்ற விசாரணையின் நாளில், நீங்கள் நேரத்துக்குள் வருவது அவசியம். எதிராளி வராவிட்டால், நீதிமன்ற ம் விசாரணையை அவர் இல்லாத நிலையிலும் தொடரலாம். பிபிஓ வழங்கப்படலாம்.

மாறாக கைதாணையும் பிறப்பிக்கப்படலாம். அப்போது எதிராளி கைதாகும் வரை விசாரணை ஒத்தி வைக்கப்படும்.

இரு தரப்பினரும் ஆஜராகியிருந்தால் நீதிமன்ற ம் வழக்கை விசாரிக்க முற்படும். நீதிமன்ற செயல்முறை வருமாறு:

- விண்ணப்பதாரர் ஆகிய நீங்கள் உங்கள் வழக்கையும் சான்றுகளையும் முன்வை ப்பீர். இது முதற் கட்ட விசாரணை எனப்படும்.
- எதிராளி விண்ணப்பதாரரின் வழக்கு மற்றும் சான்றுகள் குறித்து கேள்விகள் கேட்க வாய்ப்பு வழங்கப்படும். இது குறுக்கு விசாரணை எனப்படும்.
- உங்களில் எவரேனும் வழக்கறிஞரால் பிரதிநிதிக்கப்பட்டிருந்தால், அத்தரப்பின் வழக்கறிஞர் முதற் கட்ட விசாரணையையும் குறுக்கு விசாரணையையும் செய்வார்.
- உங்களுக்கு வழக்கறிஞர் இருந்தால், உங்களிடம் மறுவிசாரணையின் போது அவர் மேலும் கேள்விகள் கேட்கலாம்.
- எதிராளி அவரது வாதத்தையும் சான்றை யும் முன்வை ப்பார்.
- விண்ணப்பதாரர் எதிராளி வழக்கு மற்றும் சான்றுகள் குறித்து கேள்விகள் கேட்க வாய்ப்பு வழங்கப்படும்.
- எதிராளி வழக்கறிஞரால் பிரதிநிதிக்கப்பட்டிருந்தால், அவர் எதிராளியிடம் மறுவிசாரணையின் போது மேலும் கேள்விகள் கேட்கலாம்.
- இரு தரப்பினரும் அவர்கள் முன்வை த்த வழக்கின் சுருக்கத்தை நீதிபதியிடம் எடுத்துக் கூறுவர். நீதிபதி பின்னர் முடிவெடுப்பார்.
  - குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது அல்லது நிகழும் வாய்ப்புகள் உள்ளன மற்றும் விண்ணப்பதாரரின் பாதுகாப்புக்கு இப்படியொரு உத்தரவு வழங்குதல் அவசியம் என நீதிமன்ற ம் திருப்தியடைந்தால், பாதுகாப்பு உத்தரவு வழங்கப்படலாம்.
  - நீதிபதி ஆலோசனை அமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு இரு தரப்பினருக்கும் அல்லது ஒரு தரப்பினருக்கு மட்டும் ஆலோசனை ஆணை இட முடிவெடுக்கலாம்.

    இந்த கையேட்டின் 15-ஆம் பக்கத்தில் உள்ள "கட்டாய ஆலோசனை" இன் கீழ் கூடுதல் தகவல்களைக் காணலாம்.
  - மேற்கண்ட அம்சங்களில் திருப்தியடையவில்லை என்றா ல் வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம்.

எதிராளி வழங்கப்பட்ட உத்தரவை மீறினால், பக்கம் 3-ஐ பார்க்கவும்.



# பிபிஓ-க்கான அழைப்பாணை ஒன்றை நீங்கள் பெற்றால் (எதிராளிக்கு)

## அழைப்பாணைகள் என்றால் என்ன?

### அழைப்பாணைகள்



அழைப்பாணை என்பது நீதிமன்ற உத்தரவு. இது நீதிமன்றத்தில் நீங்கள் ஆஜராகும்படி உத்தரவிடுகிறது. விண்ணப்பத்திற்கான உங்கள் பதிலை வழங்க உங்களுக்கும் விண்ணப்பதாரருக்கும் குறிப்பிட்ட நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய தேதி மற்றும் நேரத்தை இது குறிப்பிடும். இந்த தேதி “மென்ஷன்ஸ்” தேதி என குறிப்பிடப்படுகிறது.

அழைப்பாணைகள் இவ்வகைகளில் வழங்கப்படலாம்:

- நீதிமன்ற சார்வாளர் உங்களுக்கு நேரில் அழைப்பாணையை சார்வு செய்வார், அல்லது
- நீங்கள் இல்லாதிருந்தால், உங்களுடன் வசிக்கும் வயது வந்த உறுப்பினர் பெற்றுக்கொள்ளலாம். அல்லது, உங்கள் இல்லத்தில் தெளிவாக தெரிகிற ஒரு பகுதியில் ஒட்டி வைக்கலாம்.

நீதிபதி துரித ஆணை வழங்கியிருந்தால் அழைப்பாணைகளோடு அதுவும் வழங்கப்படும். துரித ஆணை பற்றி பக்கம் 3-றில் மேலும் தெரிந்துகொள்ளலாம்.

துரித ஆணை என்பது ஒரு தற்காலிக பாதுகாப்பு உத்தரவு என்பதால், அதை மீறிவிட்டால் விண்ணப்பதாரர் காவல் துறையிடம் மீறுதல் குறித்து புகார் செய்யலாம்.

# பிபிஓ அழைப்பாணையைப் பெற்றுக்கொண்டவுடன் வரும் அடுத்த கட்டங்கள் (எதிராளிக்கு) (தொடர்)

**கூடுதல் உதவி**

உங்கள் வழக்கு சம்பந்தமாக கூடுதல் உதவி தேவையா என எண்ணிப்பார்க்கவும். இந்த கையேட்டின் 16-ஆம் பக்கத்தில் கூடுதல் தகவல்களைக் காணலாம்.

## படி 1:

### அழைப்பாணை கட்டம்



“மென்ஷன் ஸ்” என அழைக்கப்படும் நீதிமன்ற அமர்வுக்கு வரவேண்டிய தேதியும் நேரமும் அழைப்பாணைகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

நீங்கள் குறிக்கப்பட்டிருக்கும் தேதியில் வர இயலாவிட்டால்:

- அமர்வை வேறொரு தேதிக்கு மாற்றுவதற்கான காரணத்தை ஆதரிக்கும் ஆவணங்களுடன் முறையாக விண்ணப்பம் செய்ய**iFAMS** வலைத்தளத்தை நாடவும்.

  அப்படி உங்கள் காரணத்தை நீதிமன்ற ம் ஏற்றுக்கொண்டா ல், அமர்வுக்கு நீதிமன்ற ம் ஒரு புதிய தேதியை குறிக்கும். இல்லையெனில் நீங்கள் அமர்வுக்கு திட்டமிடப்பட்ட தேதியில் கலந்துகொள்ள வேண்டும்.

- இந்த அமர்வில் நீங்கள் கலந்து கொள்ளாவிட்டால், நீதிபதி:
  - உங்களுக்கு எதிராக கைதாணை பிறப்பிக்கலாம்; அல்லது
  - வழக்கு நீங்கள் இல்லாத நிலையிலும் நடைபெற உத்தரவிடலாம்

## படி 2:

### நீதிமன்ற அமர்வு கட்டம்



அமர்வு நாளை குறிக்கும் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் நீதிமன்ற ம் 1-க்கு வந்து சேருங்கள்.

- இந்த அமர்வில் விண்ணப்பதாரர் ஆஜராக தவறினால், வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம்.
- இக்கட்டத்தில் விண்ணப்பதாரர் வழக்கை இனிமேலும் தொடர விரும்பவில்லை என்றா ல், அவர் விண்ணப்பத்தை திரும்ப பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பத்தில் உள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் நீங்கள் ஒப்புக் கொண்டு பிபிஓ வழங்கப்படுவதற்கு சம்மதம் அளித்தால், மேலும் விண்ணப்பதாரரின் பாதுகாப்பிற்கு இது அவசியம் என்று நீதிமன்ற ம் திருப்தி அடைந்தால் பிபிஓ வழங்க உத்தரவிட நீதிமன்ற ம் முற்படலாம்.
- நீதிமன்ற ம் எதிராளிக்கு அல்லது இரு தரப்பினருக்கும் கட்டாய ஆலோசைன வழங்குவதற்கான கூடுதல் உத்தரவை வழங்கலாம்.

  இந்த கையேட்டின் 15-ஆம் பக்கத்தில் உள்ள "கட்டாய ஆலோசைன" -இன் கீழ் கூடுதல் தகவல்களைக் காணலாம்.

விண்ணப்பதாரர் வழக்கை இன்னும் தொடர விரும்பினால் மற்றும் நீங்கள் விண்ணப்பத்திற்கு சம்மதிக்கவில்லை என்றா ல் நீதிமன்ற ம் உங்கள் இருவரையும் நீதிமன்ற குடும்ப நிபுணரிடம் அனுப்பலாம்.

முதாலவது அமர்வில் எந்தவொரு தீர்வும் இல்லையென்றா ல் , இந்த வழக்கு விசாரணைக்கு தொடர வேண்டும். விசாரணை தேதி குறிக்கப்படுவதற்கு முன், நீங்கள் மற்றும் விண்ணப்பதாரர் அடுத்த நீதிமன்ற அமர்வில் பொருத்தமான ஆவணங்களைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தப்படுவீர்கள். இது முதல் அமர்வின் நாளிலிருந்து சுமார் 3 வாரங்களுக்குப் பிண்னர் . விண்ணப்பதாரர் தயாரிக்கும் வழக்கமான ஆவணங்கள் பின்வருமாறு:

- சம்பவம் குறித்து காவல் துறையிடம் செய்யப்பட்ட புகார், ஏதேனும் இருந்தால்.
- காயங்கள் தொடர்பாக மருத்துவ அறிக்கைகள் ஏதேனும் இருந்தால்,
- பிற சான்றுகள், ஏதேனும் இருந்தால் உதாரணத்திற்கு, உங்கள் காயங்களின் புகைப்படங்கள், ஒலிப்பதிவுகள் அல்லது காணொளி பதிவுகள் மற்றும் உங்களுக்கும் விண்ணப்பதாரருக்கும் இடையிலான குறுஞ்செய்திகள். எந்தவொரு ஒலிப்பதிவும் எழுத்து வடிவில் மாற்றப்பட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

இதேபோன்று விசாரணையின் போது நீதிமன்றத் திடம் நீங்கள் காட்ட விரும்பும் உங்களின் எதிர்வாதத்திற்குறிய ஆவணங்களையும் நீங்கள் தயார் செய்ய வேண்டும்.

இவற்றை உறுதிப்படுத்தவும்:

- ஒவ்வொரு பக்கத்திலும் பக்க எண்க ள் குறிக்கப்பட்டு ஆவணங்கள் சரியான வரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன
- ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. உங்களிடம் ஆங்கிலம் அல்லாத ஆவணங்கள் இருந்தால், அதிகாரப்பூர்வ மொழிபெயர்ப்பாளர்களிடமிருந்து ஆங்கில மொழிபெயர்ப்புகளை இணைக்கவும்.
- மூன்று (3) முழுமையான மற்றும் ஒரே மாதிரி இருக்கும் ஆவணங்களின் தொகுப்புகள் இவர்களுக்காக தயாரிக்கப்படுகின்றன :

  1) நீதிமன்றத் திற்கு,
  2) உங்களுக்கு மற்றும்
  3) விண்ணப்பதாரருக்கு.



# பிபிஓ அழைப்பாணையைப் பெற்றுக்கொண்டவுடன் வரும் அடுத்த கட்டங்கள் (எதிராளிக்கு) (தொடர்)

## படி 3:
## நீதிமன்ற விசாரணைக் கட்டம்



நீதிமன்ற விசாரணையின் நாளன்று, நீங்கள் நீதிமன்ற விசாரணைக்கு சரியான நேரத்திற்கு வர வேண்டும்.

நீங்கள் வராவிட்டால், நீங்கள் இல்லாத நிலையிலும் விசாரணை தொடரக்கூடும். மேலும் பிபிஓ-விற்கு உத்தரவிடப்படலாம்.

மாறாக, உங்களுக்கு எதிராக கைதாணை பிறப்பிக்கப்படலாம். எதிராளியான நீங்கள் கைதாகும் வரை விசாரணை ஒத்தி வைக்கப்படும்.

இரு தரப்பும் ஆஜராகியுள்ள நிலையில், நீதிமன்றம் வழக்கை விசாரிக்கும். நீதிமன்ற செயல்முறை பின்வருமாறு:

- விண்ணப்பதாரர், அவரது வாதத்தையும் சான்றுகளையும் முன்வைப்பார். இது முதற் கட்ட விசாரணை என்று அழைக்கப்படுகிறது.
- எதிராளியாகிய நீங்கள் விண்ணப்பதாரரின் வழக்கு மற்றும் சான்றுகள் குறித்து கேள்விகள் கேட்க வாய்ப்பு வழங்கப்படும். இது குறுக்கு விசாரணை எனப்படும்.
- உங்களில் எவரேனும் வழக்கறிஞரால் பிரதிநிதிக்கப்பட்டிருந்தால், அத்தரப்பின் வழக்கறிஞர்கள் முதற் கட்ட விசாரணையையும் குறுக்கு விசாரணையையும் செய்வார்.
- விண்ணப்பதாரருக்கு வழக்கறிஞர் இருப்பின், விண்ணப்பதாரரிடம் மறுவிசாரணையின் போது மேலும் கேள்விகள் கேட்பார்.
- எதிராளியாகிய நீங்கள் உங்கள் வாதத்தையும் சான்றையும் முன்வைப்பீர்.
- விண்ணப்பதாரர் உங்கள் வழக்கு மற்றும் சான்றுகள் குறித்து உங்களைக் கேள்விகள் கேட்க வாய்ப்பு வழங்கப்படும்.
- நீங்கள் வழக்கறிஞரால் பிரதிநிதிக்கப்பட்டிருந்தால், அவர் உங்களிடம் மறுவிசாரணை குறித்து மேலும் கேள்விகள் கேட்கலாம்.
- இரு தரப்பினரும் அவர்கள் முன்வைத்த வாதத்தின் சுருக்கத்தை நீதிபதியிடம் எடுத்துக் கூறுவர். நீதிபதி பின்னர் முடிவெடுப்பார்.

  குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது அல்லது நிகழும் வாய்ப்புகள் உள்ளன என்பதில் நீதிமன்றம் திருப்தியடைந்தால்; மற்றும் விண்ணப்பதாரரின் பாதுகாப்புக்கு இப்படியொரு உத்தரவு வழங்குதல் அவசியம் என நீதிமன்றம் திருப்தியடைந்தால், பாதுகாப்பு உத்தரவு வழங்கப்படலாம்.

  - நீதிபதி ஆலோசனை அமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு இரு தரப்பினருக்கும் அல்லது ஒரு தரப்பினருக்கு மட்டும் ஆலோசனை ஆணை இட முடிவெடுக்கலாம். இந்த கையேட்டின் 15-ஆம் பக்கத்தில் உள்ள "கட்டாய ஆலோசனை" இன் கீழ் கூடுதல் தகவல்களைக் காணலாம்.
  - மேற்கண்ட அம்சங்கள் திருப்தியளிக்கவில்லை என்றால் வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம்.

பிபிஓ, ஈஓ மற்றும் டீஇஓ-வை மீறுவது குற்றமாகும். கூடுதல் தகவல் பெற தயவு செய்து பக்கம் 3-ஐ பார்க்கவும்.

# கட்டாய ஆலோசனை (சிஜிஓ)



- பிபிஓ-வுடன் மட்டுமே சிஜிஓ வழங்கப்படும்.
- சி.ஜி.ஓ உத்தரவு செய்யப்படும்போது, சமூகம் மற்றும் குடும்ப மேம்பாட்டு அமைச்சினால் (எம்.எஸ்.எஃப்) நியமிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தில் அமர்வுகள் நடத்தப்படும்.
- சி.ஜி.ஓ-க்கு கூடுதலாக, எந்தவொரு தரப்பினருக்கும் அடிமையாதல் பிரச்சினை இருப்பதாகவும், ஆலோசனை தேவை என்றும் நீதிமன்றத் தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், தேசிய அடிமையாதல் மேலாண்மை சேவைகள் (**NAMS**) ஆலோசனை அமர்வுகளில் கலந்து கொள்ள நீதிபதி உங்களுக்கு உத்தரவிடலாம். மேலும் விவரங்களுக்கு **NAMS** வலைத்தளத்தைப் பார்வையிடவும்.
- இந்த அமர்வுகளுக்கு செல்வது கட்டாயமாகும்.
- கலந்துகொள்ளத் தவறினால் ஆலோசனை ஆணையை மீறுவதாகக் கருதப்படும். மேலும் நீதிமன்ற த்தை அவமதிக்கும் செயலாக கருதப்படுவதால் இது சட்டப்படி தண்டனை க்குரியது..
- சிஜிஓ உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டால், நீதிமன்ற ம் ஆறு மாதங்களுக்குப் பிறகு நீதிமன்ற மறுஆய்வு தேதியை நிர்ணயிக்கும்.
  - ஆலோசனை அமர்வுகளுக்குப் பிறகு ஆலோசனை நிறுவனம் வழங்கிய அறிக்கையின் அடிப்படையில், விண்ணப்பதாரரின் முன்னேற்ற த்தையும் உங்களின் முன்னேற்ற த்தையும் நீதிபதி மறுஆய்வு செய்வார்.
- இரு தரப்பினரும் தொடர்ந்து ஆலோசனையில் கலந்து கொள்ள வேண்டுமா என்பதை நீதிபதி தீர்மானிப்பார்.
- நீதிமன்றத் தில் இருந்து கூடுதல் வழிமுறைகளைப் பெற தரப்பினர்/இரு தரப்பினரும் நீதிமன்ற மறுஆய்வில் நேரில் கலந்து கொள்ள வேண்டும்.
- தரப்பினர்/இரு தரப்பினரும் மறு ஆய்வில் கலந்துகொள்ள முடியாவிட்டால், அமர்வை வேறொரு தேதிக்கு மாற்றுவதற்கான காரணத்தை ஆதரிக்கும் ஆவணங்களுடன் முறையாக விண்ணப்பம் செய்ய **iFAMs** வலைத்தளத்தை நாடவும்.
  - அப்படி உங்கள் காரணத்தை நீதிமன்ற ம் ஏற்றுக்கொண்டா ல், அமர்வுக்கு நீதிமன்ற ம் ஒரு புதிய தேதியை குறிக்கும்.
- தரப்பினர்/ இரு தரப்பினரும் இனி கட்டாய ஆலோசனைக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை என்று நீதிமன்ற ம் கண்ட றிந்தவுடன், தரப்பினரை/இரு தரப்பினரையும் கட்டுப்பாட்டிலிருந்து நீதிமன்ற ம் விடுவிக்கும். நீதிமன்ற ம் தரப்பினரை/இரு தரப்பினரையும் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கவில்லை என்றா ல் தரப்பினர்/இரு தரப்பினரும் எல்லா ஆலோசனை அமர்வுகளுக்குச் செல்ல வேண்டும்.
- இந்த கட்டாய ஆலோசனை அமர்வுகள் பற்றிய கூடுதல் தகவல்களை எஃப்.ஜே.சி வலைத்தளத்தில் காணலாம்.

# பயனுள்ள தகவல்

## கூடுதல் உதவி

உங்கள் வழக்கு சம்பந்தமாக கூடுதல் உதவி தேவையா என கருத்தில் கொள்ளவும்.

- **மொழிபெயர்ப்பாளர்கள்**
  உங்களுக்கு மற்றும்/அல்லது சாட்சி அளிப்பவர்(களுக்கு) மாண்டரினின், மலாய் அல்லது தமிழ் அல்லாத வேறெந்த மொழிக்கும், மொழிபெயர்ப்பாளர் தேவை என்றால் உங்கள் கோரிக்கையை விரைவாக நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவும்.
- **வழக்கறிஞர்**
  - நீங்கள் சட்ட அறிவுரையை நாட விரும்பினால், சட்ட அறிவுரை எனும் பிரிவின் கீழ் கூடுதல் தகவலை காணலாம்.
  - நீங்கள் வழக்கறிஞரை நியமிக்க விரும்பினால், அதை கூடிய விரைவில் செய்யவும்.
- **சாட்சி**
  - விசாரணையில் உங்கள் வழக்கிற்கு சாட்சியமளிக்க சாட்சிகளை அழைக்க விரும்பினால், முன்கூட்டியே நீதிமன்றத்திடம் தெரிவிக்கவும்.
  - விசாரணை தேதி சாட்சியளிப்பவர்களுக்கு ஏற்றதாக உள்ளதை உறுதி செய்க.
  - சாட்சியளிப்பவர்களுக்கு அழைப்பாணை வழங்க வேண்டியிருந்தால், சாட்சியளிப்பவர் அழைப்பாணைக்கு எஃப்.பி.சி-யில் விண்ணப்பம் செய்யவும்.
  - உங்கள் சாட்சி ஆங்கிலம் பேச இயலாவிட்டால், அவர் பேச விரும்பும் மொழி எண்னவென்று நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கவும்.

## சட்ட ஆலோசனை

- உங்களுக்கு சட்ட ஆலோசைன தேவைப்பட்டால், நீங்கள் பின்வருபவனவற்றை நாடலாம்:
  - சட்ட உதவி செயலகம்,
  - சமூக நீதி நிலையம், அல்லது அரசு நீதிமன்றங்களில் நடத்தப்படும் சமூக சட்ட உதவி நிலையம்

## நீதிமன்ற விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்

வழக்கறிஞர் ஒருவரால் நீங்கள் பிரதிநிதிக்கப்படவில்லை என்றால், நீதிமன்றத்தில் எவ்வாறு சரியான முறையில் நடந்து கொள்வது என்பதை அறிந்திருப்பது முக்கியம்.

இது குறித்து கூடுதல் தகவல் பெற, தயவு செய்து “சிவில் வழக்குகளில் சுய பிரதிநிதித்துவத் தரப்பினர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்” வழிகாட்டியில் உள்ள “உரிமைகள் மற்றும் பொறுப்புகள்” பகுதியைப் பார்க்கவும். இது உங்கள் வழக்கிற்கு பொருந்தும். இந்த வழிகாட்டியை எஃப்.ஜே.சி வலைத்தளத்தில் காணலாம்.

## பி.எஸ்.சி* இருக்கும் இடங்கள்

- Ang Mo Kio-வில் அமைந்துள்ள வன்முறைக்கு மாற்றுவகைகளை ஊக்குவிப்பதற்கான மையம் (பேவ்)
- Bedok-ல் அமைந்துள்ள TRANS SAFE நிலையம்; அல்லது
- Commonwealth-ல் அமைந்துள்ள Care Corner Project StART (CCPS)

*தயவு செய்து பி.எஸ்.சி *-களின் ஆக அண்மைய பட்டியலை காண சமூகம் மற்றும் குடும்ப மேம்பாட்டு அமைச்சின் இணையத் தளத்தை பார்வையிடவும்

## நீதிமன்ற அவமதிப்பு

நீதிமன்றத்தின் உதவிநாடுவோரின் நலனுக்காக நடைபெறும் சட்ட நடவடிக்கைகளின் நேர்மையைக் கட்டிப்பது உட்பட, நீதிமன்றத்தின் அவமதிப்பு தொடர்பான சட்டத்திற்கு நீதி நிர்வாகம் (பாதுகாப்பு) சட்டம் 2016 வழி வகுக்கிறது என்பதை கவனத்தில் கொள்க.

இது சம்பந்தமாக எந்தவொரு நீதிமன்றத்திலும் நீதிபதி தலைைம தாங்கும் போது ஒரு நபர் எந்தவொரு நீதிபதியையும் அவமதிப்பது அல்லது குறுக்கீடு அல்லது தடைகளை ஏற்படுத்துவது ஒரு குற்றமாக அமைகிறது. மேலும், குற்றவியல் சட்ட தண்டனை 224-ன் படி ஒரு நபர் ஒரு நீதித்துறை நடவடிக்கையின் எந்த கட்டத்திலும் அமர்ந்திருக்கும் நீதிபதியை வேண்டுமென்றே அவமதிப்பது அல்லது எந்தவொரு தடங்கலையும் ஏற்படுத்துவது குற்றமாகும்.

## சட்ட சொற்களின் விரைவு குறிப்பு

**விண்ண ப்பதாரர்:**
தன்னை /குடும்ப உறுப்பினரை பாதுகாத்துக்கொள்ள பிபிஓ-விற்கு விண்ணப்பம் செய்யும் நபர்.

**எதிராளி:**
குடும்ப வன்முறை புரிந்தவர் அல்லது புரியக் கூடும் எனக் கருதப்படும் நபர்.

**பிபிஓ:**
சுய பாதுகாப்பு ஆணை, சம்மந்தப்பட்ட குடும்ப உறுப்பினர் மீது குடும்ப வன்முறை பயன்படுத்த கூடாது என உத்தரவிடும் ஆணை.

**ஈஓ:**
துரித ஆணை, நீதிமன்ற விசாரணையின் தேதி வரை விண்ணப்பத்தாரரை பாதுகாக்கும் ஒரு தற்காலிக பிபிஓ.

**டிஇஓ:**
மனையிட/வீட்டு வளாக விலக்கல் ஆணை, எதிராளியை விண்ணப்பதாரரின் வீட்டினுள் அல்லது வீட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு வருவதை கட்டுப்படுத்தும் அல்லது தடை செய்யும் ஆணை.

**சிஜிஓ:**
ஆலோசைன ஆணை, இந்த ஆணையை நீதிமன்ற ம் விண்ணப்பதாரருக்காக மற்றும்/ அல்லது எதிராளிக்காக மற்றும்/ அல்லது குடும்ப உறுப்பினர்காக ஆலோசைனயில் கலந்து கொள்ள உத்தரவிடும்.

**எஃப்.பி.சி:**
குடும்ப பாதுகாப்பு மையம், விண்ணப்பதாரர்கள் பிபிஓ-விற்கு விண்ணப்பம் செய்வதற்காக எஃப். ஜே.சி-யில் அமைந்திருக்கும் நிலையம்.

**பி.எஸ்.சி:**
குடும்ப வன்முறை நிபுணர் மையம், குடும்ப வன்முறையை எதிர்நோக்கும் நபர்கள் உதவி நாடும் மற்றும் பிபிஓ-விற்கு விண்ணப்பம் செய்யும் இடம்.

FAMILY JUSTICE COURTS
SINGAPORE